ஆறுமுகன் அருட்தலங்கள் - 1666



அவனருள் வெளியீடு - 18

மார்ச் - 1992

அறப் பிரசுர விலை ரூ. 5-00

உ

ஆறுமுகன் அருட்தலங்கள் - 1666



அவனருள் வெளியீடு - 18

மார்ச் - 1992

அறப்பிரசுர விலை ரூ. 5-00

(உட்குறிப்பிட்ட மற்றும் விடுபட்டிருக்கக்கூடிய முருகன் ஆலயங்களுக்கு மட்டும் இலவசம்)

உ

அருளுரை

உ Phone: 2115

Sri Chandramouleeswaraya Namaha

SRI SANKARA BHAGAVADPADACHARYA PARAMPARAGATHA

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

Jagadguru Sri Sankaracharya Swamigal

SRIMATAM : SAMSTHANAM

KANCHEEPURAM-631 502.

Camp— தி. [illegible] Date 3. 2. 92.

கோயில்களில் [illegible] தெய்வமாக முருகன் வழங்கிவருகிறார். தந்தைக்கே ப்ரணவோபதேசம் செய்தவர். 'ஸ்வாமி' என்ற சொல்லுக்கே முருகன் என்ற பொருள் என்று அகராதி (அமரம்) கூறுகிறது. ஆதிசங்கரர் ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் செய்து முருகனை [illegible] அளித்துள்ளார்.

முருகனுக்கு என்றிருந்த தலங்களுள் ஆறுபடை வீடுகளும் [illegible], [illegible], [illegible], மதுரை என்ற பக்தர் 'அவன்' என்ற [illegible] இந்த நூலில் முருகனின் 1666 தலங்களைக் குறித்துள்ளார். இதில் மாவட்ட வாரியாக உள்ள தலங்கள், அவைகளின் இடம், அதற்குப் போகும் வழி, அந்தந்த தலங்களின் சிறப்புகள் போன்றவைகளை அடக்கியுள்ளது. தேவாரம், திருப்புகழ் போன்ற பாடல் பெற்றுள்ள தலங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தலங்களைச் சென்று தரிசிக்க [illegible] அன்பர்களுக்கு அவ்வப்போது வழிகாட்டும் இந்நூல் மிகப் பயன்படும். பலரும் முருகனின் தலங்களை தரிசித்து அவனருளைப் பெற ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி:

முன்னுரை

மதுரை மாரியம்மன் தெப்பக்குளம் மேல்கரையிலுள்ள ஸ்ரீ மரகதவல்லி முக்தீஸ்வரர் அருளாலும், ஸ்ரீ காஞ்சி பரமாச்சாரியாரின் கிருபையாலும் விளைந்தவையே அறப்பிரசுர விலை கொண்ட அவனருள் வெளியீடுகள்.

ஸ்ரீ பெரியவர் அருளியபடி தமிழகத்திலுள்ள அனைத்து சிவாலயங்களைப் பற்றியும் மாவட்ட வாரியாக, முக்கியக் குறிப்பு கொண்ட, கையடக்கமான நூல் எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளேன். சிவனூரில் துவங்கிய பணி சிவபாலனில் வளர்ந்து விட்டதால் ஆறுமுகன் அருட்தலங்கள் - **1666** அவனருள் **18** ம் வெளியீடாக வருகிறது.

அழைத்தவிடமெல்லாம் அருளும் ஆறுமுகனின் தலங்கள் 1666 மட்டுமல்ல. இன்னும் அநேகமிருக்கும். 1666 பற்றியாவது அறிய முடிந்ததே என்ற எண்ணத்தில் அவற்றை பல்லோரும் அறியச் செய்வதே நூலின் முதன் நோக்கம்.

பரவியுள்ள பல்லாயிரம் சிவாலயங்களிலும் (குறிப்பாக, தென்னிந்தியாவில்) முருகன் சன்னதியிருப்பினும் கீழ்க்கண்ட அடிப்படையில் மட்டுமே தலங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

முருகப் பெருமான்

1) பிரதான மூர்த்தியாக
2) அருணகிரி போன்ற அடியார் போற்றிய சன்னதியாக
3) தனித்தன்மை வாய்ந்த திருவுருவாக
4) குன்றுக் கோயிலில் உறைபவராக
5) குறிப்பிட்ட குறை தீர்ப்பவராக

எழுந்தருளும் ஆலயங்கள் மட்டுமே குறிப்பு பெற்றுள்ளன.

இவ்வடிப்படையில் கூட சேர்க்க வேண்டிய கோயில்கள் இன்னும் பல இருக்கும். ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் திருப்புகழ் பரப்பியதிலிருந்தும், அண்மைக் காலத்தில் பழனிக்கு பாத யாத்திரை பெருகியதிலிருந்தும் பக்தர்கள் முருகனுக்கு தனிக் கோயில் அதிகமாக எழுப்பி வருகின்றனர். விடுபட்ட ஆலயங்களைத் தெரிவிப்பின் அடுத்தடுத்த பதிப்பில் சேர்க்க இயலும்.

பண்டைத்தலமோ, இன்றைத் தலமோ-ஒவ்வொரு தலத்தின் தோற்றத்திலும், வரலாற்றிலும் பெருமை பல இருக்கும். அறிந்த தலங்கள் யாவற்றையும் கையடக்கமான ஒரே நூலில் குறிப்பிட விரும்பியதால் தலங்களைப் பற்றி மிக முக்கிய மான செய்திகளே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலயப் பெயர்; தலப் பெயர்; ஆங்கு செல்வதற்கு அருகுள்ள பெரிய ஊரிலிருந்து அல்லது தலத்திலிருந்து திசை, தூரம்; திருவுருவச் சிறப்பு; அருட்தன்மை; பழமை; மலையில் படிகள்; திருப்புகழ் எண்; அர்ச்சகரோடு தொடர்பு கொள்ள அஞ்சலெண் Pin Code ஆகியவை சுருங்கக் கூறப்பட்டுள்ளன.

இருப்பிடம் முழுமையாக நிர்ணயிக்க முடியாத சில தலங்கட்கும் நூல் பெரும் பகுதி அச்சான நிலையில் அறியப் பட்ட சில தலங்கட்கும் விரிவான செய்தி தர இயலவில்லை. எனவே, குறைந்த குறிப்புடையவை குறைந்த பெருமை யுடையவை அல்ல.

பொதுவாக, பல தலங்களிலும், மூர்த்தி தாபிக்கப்பெற்று பல்லாண்டுகள் பின்பே ஆலயம் படிப்படியாக எழும்புவதால், மூர்த்தியருளி வந்திருக்கின்ற தொன்மையை கட்டிடக் காலத் தால் நிர்ணயிக்கக் கூடாது. எண் வரிசையில் முதலில் வருபவை அதிகப்பெருமையுடையவை என்பதும் அல்ல. ஒரு மாவட்டத்திலிருந்து அடுத்த மாவட்டம் செல்கையில் அரு குள்ள தலமே முதலில் குறிக்கப்பட்டுள்ளது.

தாலூக்கா அளவில் Map வைத்து தூரம் கணிக்கப் பட்டிருப்பினும், எல்லாவிடத்திற்கும் நேரில் செல்ல இயலாமை யால், தூரத்தில் சுமார் 1 கிமீ வித்தியாசமிருக்கலாம். மலைப் பகுதியில் சற்று அதிகமுமிருக்கலாம்.

முருகன் தலத் தொகுப்பே முக்கிய நோக்கானதால், குறிப்பிட்டுள்ள ஆலயங்களில் பிரபலமாயுள்ள பிற தெய்வ சன்னதிகளின் பெருமை அதிகம் கூறப்படவில்லை.

குறையிருக்கும் - நிறைவிக்க அனைவரையும் வேண்டுகிறேன்.

அவனருள்.

கடப்பாடு

"வீடருகே கோயிலாயினும் போட்டிருந்தால் தான் கும்பிடலாம்" என்பர். நுலில் குறிப்பிட்டுள்ள எல்லாத் தலங்களையும் நேரில் தரிசிக்க வாய்ப்பிக்கவில்லையாயினும், அறியமுடிந்ததே அவன் பேரருளே. அவ்வாறறிந்து மனதா லாவது பணிய உதவிய நூல்களை ஆக்கியோர், செய்திகளை அளித்தோர் அனைவர்க்கும் கடப்பாடுடையேன்.

நோக்கியவை

1) அகில இந்திய இந்துத் திருத்தலங்கள் : வானமாமலை இராமானுஜன். 1988

2) அடியார் சரித்திரங்கள்.

3) அர்ச்சகர்களின் கடிதங்கள்.

4) அருணகிரிநாதர் அடிச்சுவட்டில் : திருப்புகழ் தலப் பயணம் — R. ராமசேஷன், R. கிருஷ்ணன். 1981

5) அருணகிரி — வரலாறும், நூலாராய்ச்சியும் : தணிகை மணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை. 1979

6) அறநிலையத்துறை ஆலயப் பட்டியல் (சுமார் 50000 கோயிற் குறிப்பு கொண்டது). 1991

7) அறநிலையத்துறை அலுவலர் கடிதங்கள்.

8) ஆறுமுகன் தலங்கள் 66 : புலவர் P.R. நடராஜன், 1975

9) அன்பர் மடல்கள்.

10) ஆந்திர அதிசயங்கள் : திரு. பரணிதரன். 1989

11) கர்நாடகப் பயணம் : ,, 1989

12) கும்பாபிஷேக மலர்கள் :

13) குன்று தோருடல் : S. குமார். 1986

14) கேரள ஆலயங்கள்: (3 பகுதி) திரு. பரணிதரன். 1988

15) கோயிற் கையேடுகள்

16) கோவை மாவட்டக் கோயில்கள் : திரு. பழனியப்பன், 1988

17) சிவஸ்தல மஞ்சரி : வ.த. சுப்ரமண்ய பிள்ளை.

18) சுப்ரமண்ய பராக்ரமம்: நா. கதிரைவேல் பிள்ளை. 1922

19) ஷண்முக தரிசனம் : நாகர்கோயில் கிருஷ்ணன், 1978

20) தமிழ்நாடு கிராமங்கள் : அகரவரிசைப்படி. 1972

21) தமிழகம்–ஊரும் பேரும்: ரா.பி. சேதுப்பிள்ளை, 1950

22) தலபுராண வரிசை

23) திராவிட வேதத் திரட்டும் தல மான்மியச் சுருக்கமும்: க. சதாசிவ செட்டியார். 1907

24) திருத்தலங்கள் 40 : உமாசங்கரன். 1987

25) திருப்புகழ் : வானதி பதிப்பக வெளியீடு. 1986

26) திருமுறைத் திருத்தலங்கள்: J. செந்தில்நாதன். 1988

27) திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் : உ.வே.சா. குறிப்புடன். 1972

28) திருவிளையாடற் புராணம் : 1923

29) தீக்ஷிதர் பாடிய திருத்தலங்கள்: திரு. பரணீதரன். 1988

30) தெய்வத்தின் குரல்: காஞ்சிப் பெரியவரின் அருளுரைத் தொகுப்பு: 5 பாகங்கள்.

31) நமது தமிழ்நாடு – மாவட்ட வரிசை: சோமலெ.

32) நவக்ரஹ க்ஷேத்ரங்கள் : லிப்கோ வெளியீடு. 1978

33) நாளிதழ் கட்டுரைகள்; குறிப்புகள்.

34) பதினெண் புராண வரிசை

35) முருக தரிசனம் : நஜன். 1976

36) முருகன் தலம் 30 : செந்தில் துறவி. 1970

37) க்ஷேத்திராடனம்: திரு. சுப்புராமன். 1985

38) Census of India – Hand Books (Vol. I & II) for all Districts of Tamil Nadu. 1961

39) Directory of Indian Post Offices – 1982.

40) District Gazeteers

41) District Maps, Taluk Maps (Tamil Nadu)

42) Fairs and Festivals - Tamil Nadu & Kerala. 1961

43) Railway Guide

44) State Maps.

45) Temples of Tamil Nadu (9 Vols.)

குறிப்பு விளக்கம்

ஆ. — ஆண்டுகள் பழமை

திபு. — திருப்புகழ் (எண்: வானதி பதிப்புப்படி)

தி.வை.த. — திருப்புகழ் வைப்புத் தலம்

தே.த. — தேவாரம் கிடைத்த தலம்

தே.வை.த. — தேவார வைப்புத் தலம்

பொருளடக்கம்

சென்னை

1) முருகாஸ்ரமம் : (மேற்கு மாம்பலம்) 12, சீனுவாசப் பிள்ளை தெரு, ஸ்ரீ சங்கரன் என்ற அடியவர் இல்லத்தில் எழும்பியுள்ள ஆலயம். காளியநர்த்தன கண்ணனைப்போல முருகன் நாகத்தில் உள்ள அபூர்வத் தலம். 600033.

2) அசோக் நகர் : மாம்பலத்துக்கு மேற்கே 2 கிமீ. ஸ்ரீபால முருகன் கோயில். 600033,

3) வடபழனி : (கோடம்பாக்கம் மேற்குப்பகுதி) சமீபத்தில் மிகவும் பிரபலமான ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோயில் ஆ. — 100 (6 வடபழனிகளில் ஒன்று. பிற : தென்னிலை — திருச்சி; செட்டிகுளம் — திருச்சி; பிலிக்கப்பாளையம் — சேலம்; குமாரபாளையம் — பெரியார் R.K.புரம் — டில்லி) 600026.

4) நுங்கம்பாக்கம் : கோடம்பாக்கத்துக்கு வடக்கே 2கி.மீ. ஸ்ரீசிவசுப்பிரமண்ய ஸ்வாமி கோயில். 600034.

5) வலசரவாக்கம் : கோடம்பாக்கத்திற்கு தென்மேற்கு 2 கி மீ. (K.K. நகரின் மேற்குப்பகுதி) இங்கு வேங்கடசுப்பிரமணிய நகரில் முருகனாலயம். 8 அடி உயரத் திருவுருவம். 600 087.

6) கோயம்பேடு : வலசரவாக்கத்துக்கு வடமேற்கே inner Ring road வழியே 4. கி, மீ. ஸ்ரீ குறுங்காலீஸ்வரர் ஆலயம். முருகன் சன்னிதியில் அருணகிரியாரின் திருவுரு உள்ளது. திபு. 1 : 709. 600 107.

7) சேத்துப்பட்டு : எழும்பூருக்கு மேற்கு 2 கி. மீ. No 54 சுப்புராய கிராமணித் தெருவில் 1905-ல் திரு, சாமிப்பிள்ளை உடையார் கட்டிய ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில். உடையார் வமிசத்தவர் பூசை. 600 031.

8) சேத்துப்பட்டு : ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 1 கி மீ. ல் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் 1909ல் கட்டப்பட்ட

ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில். உடையார் வமிசத்தவர் பூசை. 600 031.

9) புரசவாக்கம் : சேத்துப்பட்டுக்கு வடகிழக்கே (எக்மோருக்கு வடமேற்கு) 1½ கி.மீ. ஸ்ரீ சிவசுப்பிரமண்ய ஸ்வாமி கோயில் 600084.

10) சிந்தாத்ரிப்பேட்டை : எழும்பூருக்கு கிழக்கு 1 கி மீ. ஸ்ரீ பழனியாண்டவர் கோயில். சுமார் 50 ஆண்டுகள் முன் திரு பொன்னுசாமி நாடார் கட்டியது. முருகனுக்குத் திருவுரு இல்லே. படத்திற்கே வழிபாடு. 600 002.

11) சிந்தாத்ரிப் பேட்டை : ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில் 1895ல் கட்டப்பட்ட ஆலயம். 600 002.

12) சிந்தாத்ரிப்பேட்டை : ஸ்ரீ குமரவேல் ஆலயம் : 67 அய்யாசாமி முதலித்தெரு. ஆ — 80. 600 002.

13) கோமளீசுவரன் பேட்டை : ஸ்ரீ பாலசுப்பிரமணியசாமி கோயில். மூலவர் 5½ அடி உயரம். க்ஷத்திரிய வம்சத்தவர் எழுப்பியகோயில், ஆ — 150 : 600 002.

14) சென்ட்ரல் ; ரயில் நிலேயத்திலிருந்து ½ கி மீ. ல், 77, ராசப்ப செட்டித் தெருவில் ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோயில். 1672ல் திரு. மாரிசெட்டியும், கந்தப்பண்டாரமும் முருகன் அருளால் திருப்போரூர் ஏரிக்கரையில், புற்றில் கண்டெடுத்த குமாரனுக்கு சென்னேயில் எழுப்பிய ஆலயம். இராமலிங்க வள்ளலார் பெரிதும் போற்றிய தலம். பூக்கடை கந்தசாமி கோயில் என்பர். 600 001.

15) பெருமாள் கோயில் தோப்பு No 241 மிண்ட் தெரு : ஸ்ரீ சிவசுப்பிரமணியசாமி கோயில் ஆ — 200; 600 001

16) தங்கசாலேத் தெரு : ஸ்ரீ பழனியாண்டவர் கோயில் 600079.

17) பூங்கா நகர் (Park Town) : 157, N. S. C. Bose Road. ஸ்ரீ சிவசுப்பிரமணியசாமி கோயில் (குமர கோட்டம்) வைச்ய மரபினர் கட்டியது. ஆ - 150. 600 003.

18) சூளை : கோடம்பாக்கம் அருகே அண்ணா நகர் வழியில் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவில். ஆ — 150. 600 112.

19) சூளை : ஸ்ரீ சொக்கவேல் சுப்பிரமணியர் கோயில் — 1921ல் கட்டப்பட்டது. 600 112.

20) சூளை : ஸ்ரீ சுப்பிரமண்யர் ஆலயம் 600112.

21) குயப்பேட்டை : கந்தசாமி கோயில் தெருவிலுள்ள முருகனுலயம். 300 ஆண்டுகட்கும் பழமையானது. கிழக்கு இந்திய கம்பெனியார் குடியேறிய போது, இடம் மாற வேண்டியிருந்த குயவர்கள், புதரில் கண்டெடுத்த முருகன் திருவுருவுக்கு, எழுப்பிய ஆலயம். 600 012.

22) குயப்பேட்டை : ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோயில் 600012.

23) பெத்தநாயக்கன் பேட்டை : சென்ட்ரலுக்கு வடக்கே 2 கி.மீல் உள்ள Basin Bridgeக்கு கீழ்ப்புறம் No. 23, ஆயலூர் முத்தையா முதலித்தெருவில் ஸ்ரீ செங்கல்வராயசுவாமி கோயில். ஆ — 100. 600001.

24) பெத்தநாயக்கன் பேட்டை : 16/17, கொண்டாலியர் தெருவில் ஸ்ரீ பழனியாண்டவர் கோயில். ஆ — 350. 600079.

25) வியாசர்பாடி : Basin Bridgeக்கு வடமேற்கே 2 கி.மீ. ஸ்ரீ பாலதண்டாயுதபாணி கோயில். 600039.

26) பெரம்பூர் : வியாசர்பாடிக்கு மேற்கே 3 கி.மீ. குலசிங்க முதலித் தெருவில் ஸ்ரீ பழனியாண்டவர் கோயில் 600011.

27) அய்யனுபுரம் : பெரம்பூருக்குத் தென்மேற்கே 2 கி.மீ. ஸ்ரீ பழனியாண்டவர் கோயில். 600023.

28) எருக்கஞ்சேரி : வியாசர்பாடிக்கு வடமேற்கே 3 கி.மீ. ஸ்ரீ முத்துக் குமாரசாமி கோயில். 600051.

29) எருக்கஞ்சேரி : திருவள்ளுவர் நகரில் ஸ்ரீ சிங்கார வேலர் கோயில். 600051.

30) ராயபுரம் : Basin Bridgeக்குக் கிழக்கே 3 கி.மீ. கடற்கரை சமீபம். கீழமாட வீதியில் மீனவர்கள் எழுப்பிய ஸ்ரீ சிவசுப்பிரமணியசாமி கோயில். ஆ — 150. 600 013.

31) தண்டையார் பேட்டை ; Basin Bridgeக்கு வடக்கு 3 கி மீ. நேதாஜி நகரில் முருகனுக்குத் தனிக் கோயில். 600 081.

32) தண்டையார் பேட்டை : ஸ்ரீ சுப்பிரமண்யர் கோயில்.

33) திருவொற்றியூர் : தண்டையார் பேட்டைக்கு வடக்கு 4 கி.மீ. (சென்ட்ரலிலிருந்து 10 கி. மீ) ஸ்ரீ தியாகேஸ்வரர் கோயில். தோகை விரித்த மயிலில் முருகன் 5 அடி உயரத் திருவுரு. வேலன், வில்லேந்திய கோலத்தில் செம்பு விக்கிரகம் உள்ளது. திபு. 2 : 707, 708 தே த. 600 019.

34) ஏர்ணாவூர் ; திருவொற்றியூருக்கு வடகிழக்கே 3 கி மீ. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில். 600057.

35) எண்ணூர் : ஏர்ணாவூருக்கு வடக்கு 5 கி மீ, கடலோரம். இங்கு காமராஜ் நகர் 6 வது தெருவில் உள்ள முருகனாலயம் வடசெந்தூர் எனப் பிரபலமாகி வருகிறது. 600 057

36) பாடி : (திருவலிதாயம்) சென்னை சென்ட்ரலுக்கு மேற்கே சுமார் 10 கி.மீ. தொழிற்சாலை மிகுந்த பகுதி, ஸ்ரீ வல்லிஸ்வரர் கோயில். திபு 1 : 695. தே.த. 600 050.

37) ஜாம் பஜார் : (நெசவாளர் தெரு — திருவல்லிக்கேணி) Central, Egmore ரயில் நிலையங்கட்கு தென் கிழக்கே 5 கி. மீ. செங்குந்த மரபினர் எழுப்பிய ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில். ஆ — 125. 600 014.

38) மயிலாப்பூர் : (மயிலை) திருவல்லிக்கேணிக்குத் தெற்கு 4 கி. மீ. (மாம்பலத்திற்கு கிழக்கு 6 கி மீ.) ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயில். பெரிய சிவாலயத்தில் முருகனுக்குத் தனிக் கோயில். முருகன் மயில் மீதும், வள்ளி, தேவானை யானை மீதும் அமர்ந்துள்ளனர். திபு. 10 : 696—705. தே த. 600 004.

39) தேனாம்பேட்டை : மயிலையிலிருந்து மாம்பலம் வழியில் 2 கி மீ. எல்டாம்ஸ் சாலையில் ஸ்ரீ பாலசுப்பிரமணியசாமி கோயில். அருகுள்ள மிகப்பழமையான ஸ்ரீ ராமலிங்கேஸ்வரர்

ஆலயத்திலிருந்த முருகனுக்கு சுமார் 150 ஆண்டுகட்கு முன் எழுந்த பெரிய கோயில் 600 018.

40) திருவான்மியூர் : மயிலைக்குத் தெற்கு மாமல்லபுரம் வழியில் 5.கி.மீ. ஸ்ரீ மருந்தீஸ்வரர் கோயில் திபு. 1 : 106. தே த. 600 041.

41) வேளச்சேரி : திருவான்மியூருக்கு மேற்கு 6 கி மீ. (கிண்டிக்குத் தெற்கு 5 கி.மீ) ஸ்ரீ தண்டீஸ்வரர் கோயில். மகான் அப்பய்யதீஷிதர் ஆராதித்த ஆறுமுகன் சன்னதி யுள்ள தலம். 600 042.

42) ஆலந்தூர் : வேளச்சேரியிலிருந்து வடக்கே கிண்டி வழி 3 கி. மீ. ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஆ — 100. 600016,

43) செங்குந்தக் கோட்டம் ; (சைதாப் பேட்டை) வாத்தி யார் சுப்பராய முதலித் தெருவில் ஸ்ரீ சிவசுப்பிரமணியசாமி கோயில். செந்தூரில், கந்தசஷ்டி கவசமருளிய, ஸ்ரீ பாலதேவ ராயசுவாமிகளின் வயிற்றுவலியைப் போக்கியதைப் போல இங்குள்ள முருகனும் வயிற்று வலியைத் தீர்ப்பதில் வல் லோன். செங்குந்த மரபினர் எழுப்பிய ஆலயம். ஆ—350. 600 015.

44) சைதாப்பேட்டை : மற்றொரு சிவசுப்பிரமணியசாமி கோயில். செங்குந்த மரபினர் எழுப்பியது. ஆ—350

45) ஆதம்பாக்கம் : St. Thomas Mount க்குக் கிழக்கே 1 கி மீ. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில். 600088.

46) நந்தம்பாக்கம் : St. Thomas Mountக்கு வடமேற்கு 1 கி மீ. ஸ்ரீசுப்ரமண்யசாமி கோயில், 600069.

47) திரிசூலம் ; சென்னை விமானநிலையத்துக்கு எதிர்ப் புறம் ரயில்நிலையம் தாண்டி, கிழக்கே, குன்றுகளுக்கிடையே உள்ள ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் ஆலயம். 600 100.

48) அனகாபுத்தூர் : பல்லாவரம் ரயில்நிலையத்துக்கு வடமேற்கு 3 கி.மீ. செங்குந்தர்கள் எழுப்பிய ஸ்ரீ சுப்பிர மணியர் கோயில். ஆ—100. 600 070.

49) குமரன்குன்றம் : (குரோம்பேட்டை) பல்லாவரத்துக் குத் தென்மேற்கு தாம்பரம் வழி 2 கி. மீ. சமீபகாலத்தில் தோன்றிய குன்றுக் கோயில், 600 044.

செங்கல்பட்டு

1) அம்பத்தூர் : சென்னைக்கு மேற்கே 16 கி.மீ. ஸ்ரீ சுப்பிர மண்ய சுவாமி கோயில் 600053.

2) வடமுல்லைவாயில் : அம்பத்தூரிலிருந்து 2½ கி.மீ. ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் ஆலயம், (ஸ்ரீ வைஷ்ணவி கோயி லருகே). முருகன் சுயம்பு மூர்த்தி. 1922ல் மாசிலாமணி என்பவரால் கந்தனுக்குத் தனிக்கோயிலும் எழுப்பப்பட்டுள் ளது. திபு. 3 : 692, 694. தே. த. 609 113.

3) திருவேற்காடு : அம்பத்தூர்க்குத் தென்மேற்கு 6 கிமீ, (ஆவடிக்குத் தெற்கு 5. கி.மீ) ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயம். புகழுடை கருமாரி அம்மன் கோயிலிலிருந்து ½ மைல். சூரசம் காரம் செய்த பின் முருகன் பெற்றோரை வணங்கிய தலம். திபு. 2 : 690, 691. 600 077.

4) செங்கீர்குப்பம் : திருவேற்காட்டுக்குத் தெற்கு 2 கி.மீ. பூந்தமல்லி வழி. ஸ்ரீ சிவசுப்பிரமணியசாமி கோயில். சரவண முதலியார் என்பவர் எழுப்பியது. ஆ—100. 60 0056.

5) குன்றத்தூர் : பூந்தமல்லிக்குத் தென்மேற்கு ஸ்ரீ பெரும் புதூர் வழி 6½ கி மீ. (சென்னையிலிருந்து 30 கிமீ.) பெரிய பாறைக் குன்றில் 83 படிகள் தாண்டி ஸ்ரீ முருகன் கோயில். 600 069.

6) கோவூர் : குன்றத்தூருக்கு வடகிழக்கே 4 கி.மீ. ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோயில் 602101.

7) கெருகம்பாக்கம் : கோவூருக்குக் கிழக்கே 1 கி.மீ. ஸ்ரீ சிவசுப்பிரமண்யசுவாமி கோயில். 602101.

8) ஸ்ரீ பெரும்புதூர் : குன்றத்தூருக்குத் தென்மேற்கு 13 கிமீ. காஞ்சிபுரம் வழி. ஸ்ரீ வேதபுரீஸ்வரர் கோயில். வில்லேந்திய வேலன் உள்ள தலம் 602 105

9) வல்லக்கோட்டை : (கோடைநகர்) ஸ்ரீ பெரும்புதூருக்குத் தெற்கு 10 கி.மீ. சிறுகுன்றருகில் ஸ்ரீ முத்துக்குமாரசாமி ஆலயம். 1000 ஆண்டுக்கும் மேல் பழமை. கந்தன், அருணகிரியைத் ''தன்னை மறந்தாயோ'' என்று நினைவுறுத்திய தலம். 6 அடிக்கும் மேல் உயரமான திருவுரு. திபு. 3 : 717 — 719. 602 112.

10) ஆட்டுப்புத்தூர் ; ஸ்ரீ பெரும்புதூருக்குத் தென்மேற்கு காஞ்சி வழி 17கி.மீ. ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில் 1899ல் திரு. வேலு முதலியார் எழுப்பியது. 631 552

காஞ்சிபுரம் : சென்னைக்குத் தென்மேற்கு (ஸ்ரீ பெரும் புதூர் வழியாக) 72கி.மீ. அருணகிரியார் இங்கு பணிந்து பாடிய திருப்புகழ் 44 : 457—500 அவர் பணிந்த ஆலயங்கள் பல. பெயர் உறுதியாகத் தெரிந்தவை கீழ்வருமாறு:

11) ஏகம்பம் : (ஸ்ரீ ஏகாப்பரரேஸ்வரர் கோயில்); மாவடிக்கந்தன் சன்னதி பிரபலம். முருகன் 6 முகன் 12 கரனாக மனைவியரோடு அமர்ந்துள்ள திருவுரு, திருவாசியோடு ஒரே கல்லில் அமைப்பு. இங்குள்ள விகடசக்கர விநாயகர் துதியே கந்தபுராணத்தின் முதல் துதி. தே த. 631 502.

12) ஸ்ரீ கச்சபேசுவரர் கோயில் : கார்த்திகை ஞாயிறுகளில் தலையில் மண்சட்டியில் மாவிளக்கேற்ற தலை சம்பந்தமான நோய் தீர்க்கும் தலம் 631 501.

13) திருமேற்றளீஸ்வரர் கோயில் : முருகனின் வாகனமான மயிலுக்கு இருபுறமும் தோகையுள்ளது. தே. த.

14) காமகோட்டம் : புகழ்பெற்ற ஸ்ரீ காமாட்சி கோயில்.

15) குமரகோட்டம் ; காமாக்ஷி கோயிலருகேயுள்ளது. குமரனுக்குத் தனிக்கோயில். கச்சியப்பரின் கந்தபுராணம் அரங்கேறிய பதி. அவருக்காக முருகனே ஒரு புலவனாக வந்து இலக்கணம் விளக்கிய பதி. 4 அடி உயர மூலவர்.

16) புரிசை : காஞ்சிக்கு வடகிழக்கே 16 கி.மீ. ஸ்ரீ பால முருகன் கோயில். 631553.

17) வாலாஜாபாத் : காஞ்சிபுரத்துக்குத் தென்கிழக்கே செய்கல்பட்டு வழி 13 கி.மீ. ஸ்ரீ சிவசுப்பிரமணியசாமி கோயில் 1903ல் திரு. முத்துக்குமாரசெட்டியார் கட்டியது. 631 605.

18) இளையனார் வேலூர் : வாலாஜாவிற்குத் தென்மேற்கு 8 கி.மீ. ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயில். முருகவேள் மலையன், மாகறன் என்ற அசுரர்களை வென்ற தலம். மூலவர் வெகு கம்பீரமான திருவுரு. திபு. 2: 676, 677. 631605.

19) மாகறல் : இளையனார் வேலூருக்குத் தென்மேற்கு 5 கிமீ. (காஞ்சிக்குத் தென்கிழக்கு உத்திரமேரூர் வழி 16. கி.மீ) ஸ்ரீ மாகறலீஸ்வரர் ஆலயம். முருகன் மயிலுக்கு பதில் யானை மீது அமர்ந்துள்ள பதி. தே.த. 631603.

20) உத்திரமேரூர் : மாகறலுக்குத் தெற்கு 11 கி மீ. ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயில். முருகன் 6 அடி உயரம். அருல் சாய்ந்து நின்று தந்தையை பூஜிக்கும் கோலம் திபு. 4 : 724—727. 603406.

21) விசூர் : உத்திரமேருருக்கு மேற்கே மானாம்பதி வழியாக 7 கி.மீ. ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலயம். திபு. 1 : 1001 603403.

22) மதுராந்தகம் : உத்திரமேரூருக்குத் தென்கிழக்கே 21 கி.மீ (செங்கல்பட்டுக்கு தென்மேற்கு 22 கி மீ.) ஸ்ரீ பாண்டீஸ்வரர் கோயில். திபு. 1 : 730. 603 306.

23) மதுராந்தகம் : ஸ்ரீ ஆறுமுகசுவாமி கோயில் 603306.

24) எலப்பாக்கம் : மதுராந்தகத்துக்குத் தென்மேற்கே 16 கி.மீ. ஸ்ரீ பாலமுருகன் கோயில் 603201.

25) பெரும்பேறு கண்டிகை (பேறைநகர்) : அச்சரபாக்கத்துக்குத் தென்மேற்கே 6 கி.மீ.ல் தொழுப்பேட்டுக்கு மேற்கு 1 கிமீ. மலைத்தலம். 225 படிகள். முருகனுக்கு, முன் 3, பின் 3 ஆக ஆறுமுகங்கள். தெற்கு நோக்கும் சன்னதி. எமன் வாராதிருக்கவோ! ஆ—500; திபு 1 : 732 603310.

26) குருபழனிமலை : (பெருங்கருணை) மதுராந்தகத்துக்குத் தென்மேற்கே 14 கி மீல் அச்சரபாக்கத்துக்குத் தென்கிழக்கே

5 கிமீ. நடுபழனி என்று போற்றப்படும் தலம் (தர்மபுரி—போச்சப்பள்ளி பார்க்க) 603301.

27) வளவாபுரி : (செய்யூர்) மதுராந்தகத்துக்குத் தென் கிழக்கே 26 கி.மீ. ஸ்ரீ கந்தசாமி கோயில் மிக்க அழகான செய்யூராரின் புகழ்பாடும் நூல்கள் பல. திபு.1 : 731. 603 302

28) மாடயம்பாக்கம் : செய்யூருக்கு வடகிழக்கு 6 கி.மீ. பழமையான ஸ்ரீ கந்தசாமி கோயில் சிதிலமடைந்துள்ளது.

29) நீலமங்கலம் : மதுராந்தகத்துக்குக் கிழக்கு 13 கிமீ. ஸ்ரீ அசல குருபுனித சுப்பிரமணிய சுவாமி கோயில்.

30) புலிப்பரக்கோயில் : (வட சிற்றம்பலம்) மதுராந்தகத் துக்கு வடகிழக்கே 11 கி.மீ. படாளத்திலிருந்து தெற்கே 1 கிமீ. அருள்மிகு வியாக்ரபுரீஸ்வரர் ஆலயம். முருக கோட் டம் எனப்படும் தலம். மயில் பின்புறமிருக்க முருகனின் இரு புறமும் விநயகர் உள்ளார். ஆலயக்குளத்தில் அறுசுவைக் கிணறுகள் ஆறு உள்ளன. திபு. 2: 729, 730. 603306.

31) ஆனூர் : புலிப்பரக் கோயிலுக்கு எதிரே பாலாற்றின் அக்கரையில் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோயில். முருகன் யானை வாகனன். ஒரு கையில் தாமரை. 4 அடி உயரத் திருவுரு. 603 405.

32) திருக்கழுக்குன்றம் : ஆனூருக்கு வடகிழக்கு 10 கிமீ (செங்கல்பட்டுக்குத் தென்கிழக்கு 13 கி மீ.). மலையில் ஸ்ரீ வேதகிரீஸ்வரர் ஆலயம் 500 படிகள், குகக்கோட்டம் எனப் படும் தலம். முருகன் அனைத்து எழுத்துக்களும் ஒரெழுத்தில் அடங்கியிருப்பதை உணர்வித்த பதி. திருவாசியுடன் ஒரே கல்லில் அற்புதத்திருவுரு. திபு.4 : 323—326 தே.த. 603109.

33) திருப்போரூர் : திருக்கழுக்குன்றத்திற்கு வடகிழக்கு 19 கிமீ. (செங்கல்பட்டுக்கு கிழக்கு 24 கி.மீ.) ஸ்ரீ கந்த ஸ்வாமி கோயில். முருகன் பெண்பனை மரத்தடியில் சுயம்பு. தாரகன் என்ற அசுரனை வேலன் வென்ற தலம். ஆறு முகன் இங்கு ஆடுவாகனன். ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் ''திருப்போரூர் சன்னிதி முறை'' (726 பாடல்கள்) பாடிய பதி. திபு. 4 : 720—723. 603110,

34) கச்சூர் : செங்கல்பட்டுக்கு வடகிழக்கே சிங்கபெருமாள் கோயில் வழியாக 9½ கிமீ. ஸ்ரீ மருந்தீஸ்வரர் ஆலயம். திரி. வை. த. தே. த 603 204.

35) மாடம்பாக்கம் : தாம்பரத்துக்குக் கிழக்கு 6½ கிமீ. ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலயம். திபு. 1 : 711. 600002.

36) பெரும்பேடு : சென்னைக்கு வடமேற்கு 35 கி மீ. பொன்னேரிக்கு வடகிழக்கு 6 கி. மீ. வள்ளி குறத்திக் கொண்டையுடனும், தெய்வானை கிரீடமணிந்தும் இருக்க, முருகன் 6½ அடி நெடிய திருவுரு. 601210.

37) வஞ்சிவாக்கம் : பெரும்பேடுக்கு வடகிழக்கு 4 கிமீ. ஸ்ரீ பாலசுப்ரமண்ய சுவாமி கோயில்.

38) புதுப்பாக்கம் : மாதவரத்துக்கு வடமேற்கு 8 கிமீ. பொன்னேரி வழி. ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி கோயில்.

39) ஆண்டார்குப்பம் ; (தச்சூர்) பொன்னேரிக்குத் தென்மேற்கு 5 கி.மீ. ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில். முருகன் பிரமனிடம் பிரணவப் பொருளை வினவும் கோலம். எதிரே பிரமன் திருவுரு உள்ளது திபு 1 : 743. 600 103.

40) புதுவயல் : ஆண்டார்குப்பத்துச்கு வடமேற்கே 3 கிமீ. ஸ்ரீசுப்பிரமண்ய ஸ்வாமி கோயில். 601206.

41) மாதர்பாக்கம் : (பாதிரிவேடு) : புதுவயல் / பொன்னேரிக்கு வடமேற்கே 22கி.மீ. ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயில். 601202.

42) சிறுவம்பேடு : (சிறுவை, சின்னம்பேடு) பொன்னேரிக்குத் தென்மேற்கு 10 கி.மீ. (தச்சூரிலிருந்து 5 கி.மீ.) முருகன் கோயில். இம்முருகனுக்கு அபிஷேகம் செய்த பின்பே இவ்வூரார் புது வீடு செல்கின்றனர். திபு. 4 : 735—738. 601 206.

43) வடமதுரை : சிறுவம்பேட்டுக்கு மேற்கு 8 கி.மீல் பெரிய பாளையத்துக்குத் தெற்கே வேங்கல் வழியில் 3 கி.மீ. சுமார் 80 ஆண்டுக்கு முன் திரு. ராஜு முதலியார் எழுப்பிய ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில்—601105.

44) விடாயூர் : திருவள்ளூருக்குத் தென்மேற்கு 8 கி.மீ. மிகப் பழமையான ஸ்ரீ கந்தசாமி கோயில். 631203.

45) பாகை : (பாகசாலை) திருவள்ளூருக்குத் தென்மேற்கு 11 கி. மீல் உள்ள மணவூருக்குத் தெற்கே 5 கிமீ. ஸ்ரீ முருகன் கோயில். பாதிரி மரங்கள் நிறைந்த பகுதியாதலின் முருகன் பாதிரி ஐயா எனப்படுகிறார். திருப்புகழ்த் தலம் (807—809) என்று கூறப்படுவது மேலும் ஆராயப்படல் வேண்டும். 609 311. அருணகிரி போற்றிய பாகை தஞ்சை மாவட்டம் மாயூரம் தாலுக்காவில் இருக்க வேண்டும். காரணம்

(1) அருணகிரியார் தலயாத்திரையில் மாயூரம் வட்டம் ஆக்கூர், கடவூர் தரிசித்த பின் பாகையில் பணிந்து இடைக்கழி சேர்ந்திருக்கிறார்.

(2) ''தென் பாகை'' என்று குறிப்பிடுகிறார்.

(3) ''சடல் கழி பாயும்'' பாகை என்று போற்றுகிறார். மாயூரம் வட்டம் பாகசாலையின் அருகே உப்பனாறு பாய்வது குறிப்பிடத்தக்கது.

46) திருவாலங்காடு : அரக்கோணத்துக்குக் கிழக்கு 10 கி.மீ. ஸ்ரீ ஆலங்காட்டேஸ்வரர் ஆலயம். அற்புத வேலைப்பாடு உடைய கந்தன் திருவுரு. திபு. 4 : 683—686 தே. த 609210

47) திருத்தணி : அரக்கோணத்துக்கு வடமேற்கு 14 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில். குன்றுதோருடலில் முக்கியத் தலம். 365 படிகள். சூரனை வென்ற பின், முருகன் செறு (வெப்பு) தணிந்த தலம். பிரமன் படைப்புத் தொழிலை மீண்டும் பெற்ற இடம். அருணிகிரிக்கு முருகன் தேவியருடன் நடன தரிசனமருளிய தலம். வேலன், மதப்பாகுபாடின்றி காதர் என்ற முகம்மதியரின் துன்பம் தீர்த்த பதி. திருமால் கோவிலைப் போல பக்தர்க்கு திருவடி (ஷடாரி) சாற்றப்படும் தலம். மூலவர் நவபாஷாணமாகக் கருதப்படுகிறார். திபு. 64 : 248 — 311. 631209.

48) நெடியமலை : திருத்தணிக்கு வடமேற்கு பள்ளிப்பட்டு வழியில் 21 கி.மீ யானை படுத்திருப்பது போன்ற மலை. 600 படிகள். ஸ்ரீ செங்கல்வராய சுவாமி கோயில். இங்கு தங்கி

பின்னரே கந்தன் திருத்தணிகை சென்றதால், நெடியத்தில் முருகனை தரிசித்த பின்னர் தணிகை செல்வதே முறை. ஜி. வை த. 602 004.

49) வெள்ளிகரம் : நெடியத்திற்கு மேற்கு பள்ளிப்பட்டு வழியாக 6½கி.மீ. (பள்ளிப்பட்டு தாண்டி 1½ கி.மீ.) மலை யடிவாரத்தில் ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயம். திபு - 9: 666—674 மலைமேலுள்ள ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயத்தில் முருகன் சன்னதியில்லை. 631207

50) வெள்ளிகரம் : ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில். கார் வேட்டி நகர் ஜமீந்தார்கள் கட்டியது. 631207.

51) அத்திமாஞ்சேரி : பள்ளிப்பட்டுக்குத் தெற்கே 7 கிமீ. ஸ்ரீ சண்முகசுவாமி கோயில். 631202.

52) இராஜநகரம் : அத்திமாஞ்சேரிக்குத் தெற்கு 8 கிமீ. ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில். 631304.

53) அம்மவாரிகுப்பம் : இராஜ நகரத்துக்கு தெற்கே 5 கி.மீல் ராமகிருஷ்ணராஜு பேட்டையிலிருந்து வடமேற்கு 2 கிமீ. ஸ்ரீ முருகன் கோயில். 631301.

வடஆற்காடு மாவட்டம்

1) முள்வாய் : (முள்வாய்ப்பாளையம்) அரக்கோணத்திற்கு வடகிழக்கு 8 கி.மீ. குளம் வெட்டுகையில் ஆலய இடிபாடுகள் கிடைத்ததிலிருந்து திருப்புகழ் பெற்ற பண்டைய முருகனு லயம் இங்கு இருந்திருக்க வேண்டும் என கருதப்படுகிறது. திபு. 1: 99.

2) ஷோலிங்கூர் : புகழ்பெற்ற ஸ்ரீ நரசிம்மர் தலம். அரக் கோணத்துக்கு மேற்கு 27 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில். ஆ—75. 631102.

3) கோவிந்தசேரி : ஷோலிங்கூருக்குத் தென்கிழக்கே 13 கி.மீ. ஸ்ரீ பாலசுப்பிரமணியசாமி கோயில் 632505.

4) காவேரிப்பாக்கம் : அரக்கோணத்துக்குத் தென்மேற்கு 32 கி.மீ. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் ஆ—150. 632508

5) கொண்டாபுரம் : (அரக்கோணம் வட்டம்) ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில்.

6) கரபுரம் : (திருப்பாற்கடல்) காவேரிப்பாக்கத்துக்கு தென்மேற்கு 2 கி மீ. ஸ்ரீ கரபுரீஸ்வரர் கோயில். முருகன் 6 முகன் 12 கரன். திபு. 3 : 678, 679, 681. 632508.

7) கலவை : காவேரிப்பாக்கத்துக்குத் தெற்கே 14 கி மீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 632506.

8) மேலப்புலம்புதூர் : (மேலப்புறம்) காவேரிப்பாக்கத்துக்குக்கிழக்கே 10 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் ஆ—100. 631052.

9) பனப்பாக்கம் : மேலப்புறத்துக்கு வடகிழக்கே 3 கிமீ. ஸ்ரீ மயூரநாதர் கோயில். அம்பிகை (மாயூரம், மயிலாப்பூர் போல) இறைவனை மயில் வடிவில் வணங்கிய தலம. முருகன் (அகத்தியரிடம்) பெரிதும் போற்றிக்கூறிய தலம். 631052.

10) களத்தூர் : மேலப்புறத்துக்குத் தெற்கே 6 கி.மீ. (காவேரிப்பாக்கத்துக்குத் தென் கிழக்கு 8 கி.மீ) ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில். ஆ - 150. 632508.

11) வேப்பூர் : ஆற்காட்டிற்கு மேற்கு வேலூர் வழி 1கிமீ. ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் ஆலயம். வசிஷ்ட முனிவர் வணங்கிய பதி. திபு. 1 : 763. 632503.

12) இரத்தினகிரி : (கீழ்மின்னல்) ஆற்காட்டுக்கு வடக்கே வேலூர் வழி 8கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயம். மலைத் தலம். 170 படிகள். திருமணக்கோலத்தில் முருகன். ஸ்ரீலஸ்ரீபால முருகனடிமை சுவாமிகளால் பிரபலமான தலம் 632517.

13) திருவலம் : இரத்தினகிரிக்கு வடமேற்கு 3 கி மீ. (அரக்கோணம் — காட்பாடி ரயில் வழியில் திருவலம் நிலையத்துக்குத் தெற்கு 3 கி.மீ.) ஸ்ரீ வில்வநாதேஸ்வரர் ஆலயம். வில்வம் மட்டுமே கொடுத்து வருவோரின் வினைதீர்த்த

ஸ்ரீ சிவானந்த மவுன சுவாமிகளால் பொலிவும், பிரபலமும் மீண்டும் அடைந்த தலம். திபு. 1 : 675. தே த 632515.

14) மேல்பாடி : திருவலத்துக்கு வடக்கே 9 கிமீ. ஸ்ரீ சுப் பிரமணியர் கோயில். தொல்பொருளாளரால் பாதுகாக்கப் படும் பழங்கோயில். 632520.

15) வள்ளிமலே : மேல்பாடிக்கு வடக்கு 4 கி மீ. மலேத் தலம். அடிவாரத்திலும் மலே மேலும் முருகன் கோவில்கள். மலேயில் படி 445. குடவரைக் கோயில். கந்தன் வள்ளியை காந்தருவ மணம் புரிந்த தலம். தம்பிக்குதவ அண்ணன் யானேயைப்போல் வந்த தலம். திபு - 11 : 312, 322. 632520.

வள்ளிமலே சுவாமிகளின் சமாதி வடமேற்கே 9கி.மீல் தங்கால் என்ற தமிழகத்தின் எல்லே கிராமத்தில் உள்ளது.

16) காங்கேயநல்லூர் : திருவலத்துக்குத் தென்மேற்கு வேலூர் வழி 13 கி.மீ (வேலூர்க்கு வடக்கு 6கி.மீ.) ஸ்ரீ சுப் பிரமணியசுவாமி கோயில். திருமுருக கிருபானந்தவாரியார் பிறந்த பதி. ஆ—500. 6: 2006.

17) புத்தூர் : காங்கேயநல்லூருக்கு வடகிழக்கே 8 கி.மீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில்.

18) வேலூர் : பாரிப்பேட்டை ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில் ஆ. 100. 632001.

19) குயப்பேட்டை : (வேலூர்) ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில். ஆ. 200. 632001.

20) சைதாப்பேட்டை : (வேலூர்) ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 632012.

21) சத்துவாச்சேரி ; வேலூருக்கு வடகிழக்கே 3 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில். 632009.

22. தொரப்பாடி : வேலூருக்குத் தென்மேற்கே 4 கி.மீ. ஸ்ரீ பாலசுப்பிரமண்ய சுவாமி கோயில். 632002.

23. சித்தேரி : தொரப்பாடி அருகே ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி கோயில். 632002.

24) பென்னாத்தூர் : தொரப்பாடிக்குத் தென்மேற்கு 6 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில். 632001.

25) ஏரியூர் : (வேலூர் வட்டம்) ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி கோயில். 632103

26) விரிஞ்சிபுரம் : வேலூருக்கு மேற்கு 10 கிமீ. ஸ்ரீ மார்க்க பந்து ஈஸ்வரர் ஆலயம். முருகன் 6 அடி உயரம். 50 படிகள் கொண்ட இன்னொரு தனிக்கோயிலில் முருகன் உக்ரமாய் தெற்கு நோக்குகிறான் (எமனைக் கோபித்தோ?) திபு. 2: 680, 682. 632104

27) விரிஞ்சிபுரம் : ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 632104.

28) கழனிப்பாக்கம் : விரிஞ்சிபுரத்துக்கு மேற்கே 4 கிமீ. ஸ்ரீ பாலமுருகன் கோயில்.

29) முத்துக்குமரன் மலை (ஒக்கணாபுரம்) : விரிஞ்சிபுரத்துக்குத் தென்மேற்கு 3 கிமீ.

30) காமாட்சியம்மன் பேட்டை (குடியாத்தம்): விரிஞ்சிபுரத்துக்கு மேற்கே 20 கிமீ. ஸ்ரீசுப்பிரமண்யசாமி கோயில். 632602.

31) ஒடுக்கத்தூர் (பூமலை) : விரிஞ்சிபுரத்துக்குத் தென் மேற்கு 29 கி.மீ. ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் ஆலயம். முருகன் நால் வகைப் புலவருடனும் கவிதைப்பொருள் ஆய்ந்தமையால், 'நாற்கவிராஜன்' எனப்படுகிறார். திபு. 1 : 997. 632103.

32) ஞானமலை : விரிஞ்சிபுரத்துக்குத் தென்மேற்கே 35 கி.மீல் ஆம்பூரில் உள்ளது. 635802.

33) கைலாசகிரி : ஆம்பூருக்கு வடக்கே பேராம்பட்டு வழியில் 6 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில். 635819.

34) வளையம்பட்டு : ஆம்பூருக்குத் தென்மேற்கே 15 கிமீல் உள்ள வாணியம்பாடி அருகே 2 கிமீ. ஸ்ரீ முருகன் ஆலயம் 635751.

35) வளையம்பட்டு : ஸ்ரீ பழனியாண்டவர் ஆலயம்.

36) அவாரங்குப்பம் (வாணியம்பாடி வட்டம்) : ஸ்ரீ திரு மால் முருகன் ஆலயம்.

37) ஜலகாம்பாறை : (ஏலகிரிமலை) ஆம்பூருக்குத் தென் மேற்கே வாணியம்பாடி தாண்டி ஜோலார்பேட்டை 30கி.மீ. அதன் கீழ்திசையில் ஏழைகளின் ''நீலகிரி''யாகக் கருதப் படுவது ஏலகிரிமலை. சுமார் 3000 அடி உயரம். அங்கு ஜல காம் பாறை என்ற நீரருவியின் அருகே ஸ்ரீ வெற்றிவேல் முருகன் கோயில். 1.9.1967ல் பல அன்பர்களின் முயற்சி யால், முதலில் வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டு, பின்னர் வேல் ஏந்தும் முருகனும் பிரதிஷ்டிக்கப்பட்டு 23.8.91 குட முழுக்கான தலம். 635501.

38) திருப்பத்தூர் : ஜோலார் பேட்டைக்குத் தெற்கு 8 கிமீ. நகரில் ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோயில் 635 601.

39) திருப்பத்தூர் : ரயில் நிலையத்திலிருந்து 1 கிமீ. ஸ்ரீ பழனியாண்டவர் கோயில். 635601.

40) திருப்பத்தூர் : ஸ்ரீ சுப்ரமணியசுவாமி கோயில்.

41) கொறட்டி : திருப்பத்தூருக்குத் தெற்கே ஊத்தங் கரை வழியில் 8 கி மீ. ஸ்ரீ காளத்தீஸ்வரர் கோயில். மார் மீது மஞ்சள் இடிப்பது சிறப்புப் பிரார்த்தனை. (தர்மபுரி சந்தூர் பார்க்க). திபு. 2 : 903, 904. 635611.

42) பசலிக்குட்டை (ராச்சமங்கலம்) : திருப்பத்தூருக்குத் தெற்கே 5 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில்.

43) பேராம்பட்டு : திருப்பத்தூருக்குத் தென்கிழக்கு 13 கிமீ. ஸ்ரீ சுப்ரமணியர் கோயில். ஆ—100. 635652.

44) மண்மலை : பேராம்பட்டுக்குத் தென்கிழக்கே சிங்காரப் பேட்டை வழியாக 32கி.மீல் உள்ள செங்கத்துக்குத் தென் கிழக்கே திருவண்ணாமலை வழியில் 2 கி.மீ. சிறுகுன்றில் 45 படிகள், ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோயில். 1971ல் குடமுழுக்கு 606701.

45) புதுப்பட்டு : செங்கத்துக்கு வடக்கு 5 கிமீ. ஸ்ரீ முருகன் ஆலயம். 606710.

46) மேல்பள்ளிப்பட்டு : செங்கத்துக்குத் தென்மேற்கு 7 கிமீ. ஸ்ரீ முருகன் ஆலயம். 606703.

47, 48, 49) திருவண்ணாமலை ; செங்கத்துக்குத் தென் கிழக்கே 29 கிமீ. ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயில், அருண கிரியை உய்ப்பித்து திருப்புகழ் பாடச் செய்த தலம். கோபு ரத்திளையனார், கம்பத்தடி இளையனார் என்று இரு முக்கிய முருகன் சன்னதிகள். கோபுரத்தார் அருணகிரியின் உயிரைக் காத்தவர். கம்பத்தடியார் அருணகிரியை மெய்ப்பிக்க (சம்பந்தாண்டானோடு ஏற்பட்ட வாதத்தில்) பிரத்யட்ச மானவர். 16கால் மண்டபத்தில் உள்ளார். திபு 78: 515 — 592. தே.த 606601.

மலைமேல் குகை நமச்சிவாயர் கோயிலுக்குச் செல்லும் வழியில் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் ஆந்திர அடியார் ஒருவர் எழுப்பிய ஸ்ரீ தண்டபாணி கோயில் உள்ளது. நகரில் ஸ்ரீ சுப்பிரமணிய ஆண்டவர் கோயில், ரயில் நிலையத்தி லிருந்து 1 கி.மீ. ஆ—450

50) பவழக்குன்று : திருவண்ணாமலைக்கருகே வேலூர் சாலையில் உள்ளது 87 படிகள் ஸ்ரீ பவழகிரீஸ்வரர் ஆலயம். குன்றடியிலுள்ள துர்க்கை ஆலயம் மிகப்பிரசித்தம். 606601

51) தனிப்பாடி : திருவண்ணாமலைக்குத் தென்மேற்கு 29 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில், ஆ —75. 605708.

52) ஆவூர் : திருவண்ணாமலைக்குத் தென்கிழக்கு விழுப் புரம் வழி 17 கிமீ. ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம் ஆ—70. 606 754.

53) கல்லேரி : ஆவூருக்குத் தென்மேற்கே 12 கிமீ (திருவண்ணாமலைக்குத் தென் கிழக்கே 17 கிமீ) ஸ்ரீ சுப்ரமண் யர் ஆலயம். 606806

54) காட்டாம்பூண்டி : கல்லேரிக்கு வடமேற்கே 6 கிமீ. ஸ்ரீ பாலசுப்பிரமண்யசாமி கோயில். 606806.

55) சாணனந்தல் : (திருவண்ணாமலை வட்டம்) ஸ்ரீ முத்துக் குமாரசாமி கோயில்.

56) சோமாஸ்பாடி : திருவண்ணாமலைக்குக் கிழக்கே செஞ்சி வழியில், 10 கிமீ. ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயில். ஆ — 100. 606 611.

57) துறிஞ்சாபுரம் : திருவண்ணாமலைக்கு வடக்கே 9 கிமீ ஸ்ரீ முருகன் கோயில். 606 805.

58) தேவனாம்பட்டு : துறிஞ்சாபுரத்துக்கு வடக்கு 17 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில். 606 802

59) காட்டுப்புத்தூர் : தேவனாம்பட்டுக்குத் தெற்கே அருகில். ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில ஆ—125. 606802.

60) காஞ்சி: தேவனாம்பட்டுக்கு மேற்கு 10 கிமீ. (அண்ணாமலையிலிருந்து வடமேற்கு 21 கிமீ.) ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில். ஆ—200. 606702.

61) பர்வதமலை (திரிசூலகிரி) : காஞ்சிக்கு வடக்கு 2 கிமீல் கடலாடி — மாதிமங்கலத்துக்கு இடையே. பெரிய மலை. மிகக் கடுமையான ஏற்றம் ஸ்ரீ மல்லிகார்ஜுனர் கோயில் 606998.

62) ஏலத்தூர் (பூண்டி) : பர்வத மலைக்கு வடகிழக்கு 11 கி.மீ. (போளூருக்குத் தென்மேற்கே கலசபாக்கம் வழியாக 13 கி.மீ) பரந்த மலையில் 186 படிகள். ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில். நட்சத்திரக் கோயில் என்றும் கூறுவர். சுயம்பு முருகன். முருகனுக்கு முன் சிவலிங்கம் உள்ள ஒரே தலம். ஆ - 300. 606651.

63) மேலாராணி : ஏலத்தூருக்கு வடமேற்கு 3கிமீ. (போளூரிலிருந்து சிறுவள்ளூர் வழியில் 13கிமீ.) ஸ்ரீ முருகன் கோயில்.

64) குமரக்கோயில் : (குன்னத்தூர்) போளூரிலிருந்து 3 கிமீ. உள்ளது. ரயில் பாதை ஓரமாக மலைக்கோயில். கிழக்கு நோக்கும் தண்டபாணி. ஆ — 130. 606803.

65) தேவிகாபுரம் (கனககிரி) : போளூருக்கு கிழக்கே 13 கிமீ ஸ்ரீ கனககிரீசர் ஆலயம். இங்குள்ள முருகனும், காமக்கூர் முருகனும் ஒரே சிற்பியின் படைப்பு. திபு. 1 : 408. 606902.

66) வம்பலூர் : போளூருக்கு வடகிழக்கு 11 கிமீ ஸ்ரீ குன்னத்தூர் தண்டாயுதபாணி கோயில். 606803.

67) இலுப்பைகுணம் : போளூருக்கு வடகிழக்கு 15 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில். 606903.

68) பாலமுருகன்மலை : கனககிரிக்கு அருகிலுள்ள சமீபகால மலைத்தலம். மேட்டுச்சரிவில் ஸ்ரீ பாலமுருகன் கோயில்.

69) குண்ணத்தூர் ; ஆரணிக்கு வடமேற்கே 8 கிமீ. ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோயில். ஆ. 50. 632314.

70) காமக்கூர் (காமத்தூர்) : குன்னத்தூருக்குத் தெற்கு 2 கிமீ. (கமண்டலநதிக்குத் தென்கரை) ஸ்ரீ சந்திரசேகரசாமி ஆலயம். 3½அடி முருகன் மிக்க அழகு. திபு. 1 : 998. 632316.

71) சந்தவாசல் : காமக்கூரிலிருந்து தென்மேற்கு 7 கிமீ. (போளூரிலிருந்து வடகிழக்கு 14 கிமீ) ஸ்ரீ பழனியாண்டவர் கோயில். 606905.

72) படவேடு : போளூருக்கு வடமேற்கு 24 கிமீ. சந்த வாசல் 10 கிமீ. புகழ்பெற்ற ரேணுகாம்பாள் கோயிலருகே சிறுகுன்றில் ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில். சுமார் 100 படிகள். 606803.

73) முள்ளன்றம் : ஆரணிக்கு வடமேற்கு 15 கிமீ. திருப்புகழ் அருளிய அருணகிரிநாதர் அவதாரத்தலம். 632512.

74) திமிறி : முள்ளன்றத்துக்கு வடகிழக்கு 8 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில். ஆ. 250. 632512.

75) கொருக்காத்தூர் : ஆரணிக்குத் தென்கிழக்கு 12 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யர் கோயில். கமண்டநதி தென்கரை.

76) திருவத்திபுரம் (திருவோத்தூர்) : ஆரணிக்குக்கிழக்கே 29 கி மீ. ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயம். திபு. 1: 687. தே த. 604407.

77) கீழ்நீர்குன்றம் : திருவத்திபுரத்துக்குக் கிழக்கு 9 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில். 604401.

78) மேல்மா : திருவத்திபுரத்துக்குத் தென்கிழக்கு 12 கிமீ. ஸ்ரீ திருக்குமாரசாமி கோயில். ஆ—200. 604408.

79) சித்ரகாவூர் புதூர் : மேல்மாவுக்குத் தென்மேற்கே 12 கிமீல் வந்தவாசி வழியாக 28 கிமீ. ஸ்ரீ சுப்ரமணியசாமி கோயில். 604501.

தென் ஆற்காடு மாவட்டம்

1) அவலூர்பேட்டை : செஞ்சிக்கு வடமேற்கு 22 கிமீ. ஸ்ரீ சித்தகிரி முருகன் கோயில். விரியூர் நக்கினர் என்ற யோகி சித்தியான தலம். சுமார் 400 அடி குன்று. 604201

2. தேவனூர் : செஞ்சிக்கு வடக்கு சேத்துப்பட்டு வழி 13 கிமீ. ஸ்ரீ நாகேஸ்வரர் கோயில் திபு. 3 : 745 – 747. 604208.

3) பசுமலை (மேல ஒலக்கூர்) : செஞ்சிக்கு வடகிழக்கே 15 கி.மீ. சிறு குன்று, மேற்கு நோக்கும் முருகன். சன்னதி — 604203.

4) அனந்தபுரம் ; செஞ்சிக்குத் தெற்கே 15 கிமீ. ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி கோயில் ஆ — 100. 605201.

5) சிவகிரி : அனந்தபுரத்திலிருந்து 5 கிமீ. குகையருகே ஸ்ரீ சுப்ரமணியர் கோயில். 605201.

6) திண்டிவனம் : செஞ்சிக்குக் கிழக்கு 24 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். ஆ—75. 604101.

7) கீழசேவூர் : திண்டிவனத்துக்குக் கிழக்கே 12 கிமீ. ஸ்ரீதண்டபாணி கோயில். 604101.

8) மயிலம் : திண்டிவனத்துக்குக் தெற்கே வானூர் வழியில் 11 கிமீ. ஸ்ரீசுப்ரமண்யசுவாமி கோயில். போரில் தோற்ற சூரபத்மன், கந்தனுக்கு மயில் வாகனமாகி, பின்பு மலையாகிய தலம். கள்ளிப்பாலை மட்டுமே பருகி 1000 ஆண்டுகள் வாழ்ந்த, ஸ்ரீ சிவஞான பாலயோகி சுவாமிகள் சமாதியான தலம். முடிப்பிரார்த்தனை, அங்கபிரதக்ஷிணம் சிறப்பு. மலை மேல் வாகனம் செல்ல வசதியுள்ளது. 604304.

9) திருவக்கரை : மயிலத்துக்குத் தென்கிழக்கே 11 கிமீ. ஸ்ரீ சந்திரசேகரேசுவரர் ஆலயம், திபு-2: 734, 735. தே.த. 604304.

10) வி. புதுப்பாக்கம் : திருவக்கரைக்குத் தென்கிழக்கே 6 கிமீ. ஸ்ரீ சுப்ரமணியசுவாமி கோயில். 605109.

11) கல்பட்டு : விழுப்புரத்துக்கு மேற்கே 13 கிமீ. ஸ்ரீ தண்டபாணி கோயில். 605302.

12) சென்னகுணம் ; கல்பட்டுக்கு வடமேற்கு 4 கிமீ. ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில். 605762.

13) திருஆமாத்தூர் ; விழுப்புரத்துக்கு வடமேற்கு சூரப் பட்டு வழி 4 கிமீ. ஸ்ரீ அபிராமேஸ்வரர் கோயில். திபு - 4 ; 739 - 742. தே.த. 605602.

14) வெங்கந்தூர் : திருஆமாத்தூருக்கு வடமேற்கு 4 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யர் கோயில். 605402.

15) வெள்ளையாம்பட்டு : வெங்கந்தூருக்கு வடக்கு 10 கிமீல் உள்ள அன்னியூருக்கு வடமேற்கு 3 கிமீ. ஸ்ரீ தண்ட பாணிசுவாமி கோயில். 605201.

16) கல்யாணம்பூண்டி : வெள்ளையாம்பட்டுக்குக் கிழக்கு 6 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 605203.

17) தென்பேர் : கல்யாணம்பூண்டிக்குக் கிழக்கு 8 கிமீ. (விழுப்புரத்துக்கு வடக்கு 15 கிமீ) ஸ்ரீ சுப்ரமண்யர் ஆலயம்.

18) கோலியனூர் : விழுப்புரத்துக்குத் தென்கிழக்கே பாண்டிச்சேரி வழி 5 கிமீ. ஸ்ரீ வாலீஸ்வரஸ்வாமி கோயில். இங்குள்ள முருகன் சன்னதி ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் போற்றியது. 605103.

19) குமாரகுப்பம் (வளவனூர்) : கோலியனூருக்குத் தென் கிழக்கே பாண்டி வழி 5 கிமீ. ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் போற்றிய ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோயில். 605108.

20) அரகண்டநல்லூர் (மலைக்கோயிலூர்) : விழுப்புரத்துக்கு மேற்கு 34 கிமீ. ரயில் நிலையம் அருகே சிறு குன்றின் மீது ஸ்ரீ அதுல்யநாதேஸ்வரர் ஆலயம். தே.த. 605752.

21) திருக்கோவிலூர் : மலைக்கோயிலூருக்கு மேற்கு பொன்னியாற்றின் மறுகரையில் ஸ்ரீவீரட்டேஸ்வரர் கோயில். முருகன் 6 முகன் 12 கரன். திபு 1 : 744. தே.த. 605757.

22) மேமாலூர் : திருக்கோயிலூருக்குத் தென்மேற்கே 12 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். 604751.

23) T. கீரனூர் : திருக்கோயிலூருக்கு மேற்கே 2½ கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். ஆ–80. 605757.

24) V. புத்தூர் : திருக்கோயிலூக்குக் கிழக்கே 6 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். ஆ-60, 605752.

25) வடகரைதாழனூர் : திருக்கோயிலூருக்கு வடகிழக்கே 6 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 605752.

26) திருவெண்ணைநல்லூர் : திருக்கோயிலூருக்குத் தென்கிழக்கே பண்ருட்டி வழி 19 கிமீ. ஸ்ரீ கிருபாபுரீஸ்வரர் கோயில். அருணகிரிநாதருக்கு கந்தன் நடன தரிசனமருளிய தலம். திபு-1 : 754. தே.த 607203.

27) ஒரத்தூர் : திருவெண்ணைநல்லூருக்குத் தென்மேற்கே உளுந்தூர்ப்பேட்டை வழியில் 11 கிமீ ஸ்ரீ மத்யஞானசிதம்பரேசுவரர் கோயில். மிகப்பெரிய சிவாலயம் கர்நாடகப் போரில் அழிந்து மிகச்சிறிய இரு சன்னதி மட்டுமே உள்ளது. அருகில் செய்குன்றில் இருந்த ஸ்ரீ ஞானதண்டாயுதபாணி கோயில் தற்போது இல்லை. 606102.

28) ஆனத்தூர் : திருவெண்ணைநல்லூருக்குத் தென்கிழக்கு 9 கிமீ. ஸ்ரீ பாலசுப்ரமண்யசுவாமி கோயில் 607101.

29) திருவாமூர் : ஆனத்தூருக்குத் தெற்கு 5 கிமீ. (பண்ருட்டிக்கு மேற்கு 8 கிமீ.) ஸ்ரீ பசுபதீஸ்வரர் கோயில் திபு. 1 : 750. 607106.

30) சோமாசிபாளையம் : திருவாமூருக்கு மேற்கு 2 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில்.

31, 32) திருநாமநல்லூர் (திருநாவலூர்) : திருவாமூருக்கு மேற்கு 8 கிமீ. (திருவெண்ணைநல்லூருக்குத் தென்கிழக்கு 13 கிமீ.) ஸ்ரீ பக்தஜனேஸ்வரர் கோயில். திபு. 1 : 753. தே த. 607204. ஸ்ரீ தண்டபாணி கோயில்.

33) ஆண்டிக்குழி (விஜயங்குப்பம்) : திருநாவலூருக்குத் தெற்கே 6 கிமீ. ஸ்ரீசுப்ரமண்ய சுவாமி கோயில். ஆ — 130.

34) தொரப்பாடி : பன்ருட்டிக்கு வடமேற்கு 3 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில்.

35) திருத்துறையூர் : பண்ருட்டிக்கு வடக்கே விழுப்புரம் வழி 9 கிமீ. ஸ்ரீ சிஷ்டகுருநாதேஸ்வரர் கோயில். திபு. 1 : 752 தே.த. 607205.

36) திருவதிகை : பண்ருட்டிக்குக் கிழக்கே 2 கிமீ. ஸ்ரீ விரட்டேஸ்வரர் கோயில். திபு 2 : 748, 749 தே.த. 607106.

37) மேல்பட்டாம்பாக்கம் : திருவதிகைக்கு வடகிழக்கே நெல்லிக்குப்பம் வழி 6 கிமீ. ஸ்ரீ சிவசுப்பிரமண்யசுவாமி கோயில். முருகன் மயில் மீது மனைவியருடன் காட்சி. ஆ — 100 607104.

38) கிருஷ்ணாபுரம் : மேல்பட்டாம்பாக்கத்துக்குத் தென் கிழக்கே 5 கிமீல் உள்ள நெல்லிக்குப்பத்துக்கு வடக்கு 6 கிமீ. ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோயில். ஆ — 550.

39) காரமணிக்குப்பம் : நெல்லிக்குப்பத்துக்குத் தென் கிழக்கே கடலூர் வழி 3 கிமீ ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி கோயில். ஆ-130, 609104.

40) கடலூர் : நெல்லிக்குப்பத்துக்குத் தென்கிழக்கே 9 கிமீ. ரயில் நிலையமருகே ஸ்ரீ முத்துக்குமாரசாமி ஆலயம். ஆ-300. 607003.

41) K.N. Pettai (கடலூர்) : ஸ்ரீ சுப்ரமண்யசாமி ஆலயம்

42) Books Pettai (கடலூர்) : ஸ்ரீ சுப்ரமண்யசாமி ஆலயம்.

43) சங்கொளிக்குப்பம் (கடலூர் O T) : ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோயில். 607003.

44) திருப்பாப்புலியூர்: (திருப்பாதிரிப்புலியூர்) : கடலூரின் மேற்குப் பகுதி. 3 கிமீ. ஸ்ரீ பாடலேஸ்வரர் கோயில். மயில் வடக்கு நோக்கு. திபு-1 : 755 தே த. 607002.

45) வண்டிப்பாளையம் : (கரையேறவிட்டகுப்பம்) : கடலூரின் தென் பகுதி 3 கிமீ. இங்கு முருகேசநகர் என்ற பகுதியில் ஞானியார் என்ற அடிகளார் எழுப்பிய ஸ்ரீ முருகன் கோயில். பேய், பிசாசு பிடித்தவர் கிருத்திகை, ஞாயிறுகளில் நாடும் பிரார்த்தனைத் தலம். 607004.

46) புதுப்பாளையம் (கடலூர்) : ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். ஆ-300. 607001

47) திருமாணிக்குழி : திருப்பாப்புலியூருக்குத் தென்மேற்கே 5 கிமீ (கடலூரிலிருந்து 8 கிமீ). ஸ்ரீவாமனபுரீஸ்வரர்கோயில். மயில் வடக்கு நோக்கு. திபு-1 : 756. தே.த. 607401.

48) வானமாதேவி : திருமாணிக்குழிக்குத் தென்மேற்கு 2 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். 607102.

49) விலங்கல்பட்டு : வானமாதேவிக்கு வடமேற்கு 2 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 607102.

50) புலியூர் : கடலூருக்குத் தென்மேற்கே 18 கிமீலுள்ள குள்ளஞ்சாவடிக்கு வடமேற்கு 4 கிமீ. ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோயில். ஆ — 130. 607301.

51) குறிஞ்சிப்பாடி : குள்ளஞ்சாவடிக்குத் தென்மேற்கு 12 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். ஆ — 130 607302.

52) மீனாட்சிப்பேட்டை : குறிஞ்சிப்பாடியின் ஒரு பகுதி: ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். ஆ — 130 607302.

53) விழப்பள்ளம் : குறிஞ்சிப்பாடியின் ஒரு பகுதி. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். இராமலிங்க வள்ளலார் பெரிதும் போற்றிய தலம். 607302.

54, 55) எல்லப்பன்பேட்டை : குறிஞ்சிப்பாடிக்கு வடக்கே 1½ கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். ஆ — 180. ஸ்ரீ சுப்பு ராயர் கோயில். ஆ — 190. 607302.

56) அடூர் அகரம் : குறிஞ்சிப்பாடிக்குத் தென்கிழக்கே புவனகிரி வழி 3 கிமீ. ஸ்ரீ சுப்பிரமண்யசாமி கோயில். 607302.

57) மருதூர் : குறிஞ்சிப்பாடிக்குத் தெற்கே 8 கிமீ. ஸ்ரீ தண்டபாணி கோயில். ஸ்ரீ முருகன் கோயில் 608704.

58) புவனகிரி (மேல்) : மருதூர்க்கு தென்கிழக்கே 7 கிமீ. ஸ்ரீ குமரர் கோயில். 608601.

59) வயலூர் : புவனகிரிக்குத் தென்கிழக்கே சிதம்பரம் வழி 3 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யர் கோயில். ஆ — 110. 608602.

60) மேல்மூங்கிலடி : வயலூருக்கு வடகிழக்கே 1½ கிமீ. ஸ்ரீ முருகன் கோயில். 608102.

61) சிதம்பரம் (தில்லை) : புவனகிரிக்குத் தென்கிழக்கே 8 கிமீ. உலகப் புகழ்பெற்ற ஸ்ரீ நடராஜர் கோயில். முருகனுக்கு பல சன்னதிகள். அருணகிரிக்கு, கந்தன் நடன தரிசனமருளிய பதி. முருகனே நடராஜனாகவும், நடராஜனே முருகனாகவும் தோன்றிய பதி. வடக்கு கோபுரத்துக்கு வெளியே உள்ள தனிக்கோயிலில் முருகன் பெரிய திருவுரு. நச்சினார்க்கினியனார் இப்பெருமானை ஆறுமுகப்பிள்ளையார் என்பார். திபு-65 : 596-660. தே.த. 608001.

62) திருவேட்களம் (அண்ணாமலை நகர்) : சிதம்பரத்துக்குக் கிழக்கே 3 கிமீ. ஸ்ரீபாசுபதேசுவரர் ஆலயம். முருகன் திருவுரு திருவாசியோடு ஒரே கல்லில் அமைப்பு. திபு-2 : 757, 758 தே.த 608002.

63) தில்லைவிடங்கான் : சிதம்பரத்துக்கு வடகிழக்கே 5 கிமீ. ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி கோயில் 608102.

64) பரங்கிப்பேட்டை : சிதம்பரத்துக்கு வடகிழக்கே 13 கிமீ. ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோயில். 608502.

65) அகரம் : பரங்கிபேட்டை அருகே. ஸ்ரீ குமரர் கோயில். ஆ.300 608502.

66) சிவகிரி : தில்லைக்குத் தென்கிழக்கே 3 கிமீ. ஸ்ரீ உச்சிநாதசுவாமி ஆலயம். திபு-1 : 759. தே.த. 608002.

67) மேலத்திருக்கழிப்பாலை : சிவபுரிக்கு அருகில் ½ கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 608002.

68) A. புளியங்குடி (தென்ஹரிராஜபுரம்) : தில்லைக்கு மேற்கே கண்ணங்குடி வழியாக 8 கிமீ. ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி ஆலயம் பூஜையில்லை. 608602.

69) இளநாங்கூர் : தில்லைக்குத் தென்மேற்கு 5 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில்.

70) அய்யனூராக்கமங்கலம் ; தில்லைக்குத் தென்மேற்கே தூணிசிரமேடு வழியாக 13 கிமீ. ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோயில். ஆ-250. 608305.

71) விளாகம் : அய்யனூராக்கமங்கலத்தின் தென்மேற்கு 2 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். ஆ-300. 608305.

72) ஒடக்கல்லூர் : தில்லைக்கு மேற்கு 23 கிமீ. ஸ்ரீ பால சுப்பிரமண்யசுவாமி கோயில். ஆ-300. 608201.

73) கொடியாலம் (முடிகையூர்) : தில்லைக்குத் தென்மேற்கே 10 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யர் கோயில். ஆ—35. 608305.

74) குறுங்குடி : தில்லைக்குத் தென்மேற்கே 19 கிமீ-ல் உள்ள காட்டுமன்னார்குடிக்குத் தென்மேற்கு 2 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியசாமி கோயில். 608301.

75) மேலக்கடம்பூர் : காட்டுமன்னார்குடிக்குத் தென்மேற்கு எய்யலூர் வழி 6கிமீ. சூரபத்மனோடு போரிட, முருகன் சிவனை வழிபட்டு வில் பெற்ற வரலாறுடையது. ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயம். திபு - 1 : 769. தே.த. 608304.

76) நாட்டார்மங்கலம் : காட்டுமன்னார்கோயிலுக்கு வடமேற்கு 2 கிமீ. ஸ்ரீ சுப்ரமணியசுவாமி கோயில். 608301.

77) கூடலையாற்றூர் : காட்டுமன்னார்கோவிலுக்கு வடமேற்கு 21 கிமீ. ஸ்ரீ நர்த்தனவல்லபேசுவரர் கோயில் திபு-1 : 766 தே.த. 608702.

78) ஸ்ரீமுஷ்ணம : கூடலையாற்றூருக்குத் தென்மேற்கு 6 கிமீ. இவ்வூரில் முடிகொண்ட சோழநல்லூர் என்ற பகுதியில் ஸ்ரீ நித்யீசுவரர் கோயில். திபு-2 : 770, 771. 608703.

79, 80,) ஸ்ரீ முஷ்ணம் - தென்பாதி : ஸ்ரீ பாலமுருகன் கோயில். மற்றும் ஸ்ரீ முருகன் கோயில் உள்ளது. 608703.

81) ராஜேந்திரன்பட்டினம் : (திருஎருக்கத்தம்புலியூர்) : ஸ்ரீ முஷ்ணத்துக்கு வடமேற்கு 8 கிமீ. ஸ்ரீ நீலகண்டேஸ்வரர் ஆலயம் திபு 1 : 769. தே.த. 608703.

82, 83) விருத்தாசலம் : ராஜேந்திரன்பட்டினத்துக்கு வடக்கு 11 கிமீ. ஸ்ரீ பழமலைநாதர்/விருத்தகிரீஸ்வரர் கோயில். 3ும் பிரகாரத்தில் 28 ஆகமலிங்கங்களோடு குமரேசன் சன்னதி. நான்கு திசைகளிலும் அருகில் முருகன் தலங்கள் உள்ள பதி. ஸ்ரீ திருக்குமாரசுவாமி கோயில். தி பு-3 : 760 — 762. தே த. 606001.

84) மணவாளநல்லூர் : விருத்தாசலத்துக்கு மேற்கே 2 கிமீ. ஸ்ரீ கொளஞ்சியப்பர் கோயில். முருகன் திருவுரு இல்லை. ஷண்முகசக்கரம் பொறிக்கப்பட்ட படத்திற்கே வழிபாடு. பிரபலமான பிரார்த்தனைத் தலம். 606001,

85) மங்கலம்பேட்டை : விருத்தாசலத்துக்கு வடமேற்கே 14 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 606104.

86) பெரியகண்டியங்குப்பம் : விருத்தாசலத்துக்கு மேற்கு 2 கிமீ. ஸ்ரீ வெண்மலையப்பர் கோயில்.

87) கரும்பாயிரம் கொண்ட அப்பர் கோயில். விருத்தாசலத்துக்குக் கிழக்கே 3 கிமீ.

88) வேடப்பார் கோயில். விருத்தாசலத்துக்குத் தெற்கே 3 கிமீ.

89) கீரனூர் ; விருத்தாசலத்துக்குத் தென்கிழக்கே 8கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில்.

90) வில்லுடையான்பட்டு (அத்திப்பட்டு) : விருத்தாசலத்துக்கு வடகிழக்கே 16 கிமீ-ல் நெய்வேலி நிலக்கரிச் சுரங்க மின் நிலையமருகே ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி கோயில் முருகன் சுயம்புமூர்த்தி. வேலன் வேலுக்கு பதிலாக வில்லும அம்பும் ஏந்திய கோலம். திபு 1 : 905. 607803.

91) கோமங்கலம் (விருத்தாசலம் வட்டம்) : ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில்.

92) பெண்ணாடம் : விருத்தாசலத்துக்குத் தென்மேற்கே 16 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி கோயில். 606105.

93) பெ.கொல்லத்தங்குறிச்சி : பெண்ணாடத்துக்கு வடமேற்கு 1 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்யசாமி கோயில் ஆ- 130, 606111.

94) பி. பொன்னேரி : பெண்ணாடத்துக்கு மேற்கு 1½ கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். 606111.

95) திருவரத்துறை : பெண்ணாடத்துக்குத் தென்மேற்கே திட்டக்குடி வழியில் 5 கிமீ. ஸ்ரீ ஆனந்தீசுவரர் கோயில். திபு. 1 : 769. தே.த. 606111.

96) பாட்டூர் : திருவரத்துறைக்கு மேற்கே திட்டக்குடி வழி 3 கிமீ. ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி கோயில். ஆ. 130. 606111.

97) திட்டக்குடி : பாட்டூருக்கு வடமேற்கே 3 கிமீ. ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி கோயில். ஆ — 550. 606106.

98) மேல்கல்பூண்டி (வடகரம்பூண்டி) : திட்டக்குடிக்கு மேற்கே 11 கிமீல் உள்ள தொழுதூருக்கு வடமேற்கே வெள்ளாற்றங்கரையோரம் 8 கிமீ. ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில். ஆ — 180.

99) வேப்பஞ்சத்தி : (வேப்பூர்) : தொழுதூருக்கு வட கிழக்கே 19 கிமீ. ஸ்ரீ முருகன் கோயில். ஞானஸ்கந்தமூர்த்தி மட்டுமே ஆதிப்பிரதிஷ்டை. பிற பிற்காலத்தவை. முருகன் சிவபெருமானை பூசித்ததாக மரபு. திபு - 1 : 765, 606304.

100) புத்தமங்கலம் : வேப்பூருக்கு வடக்கே பிடாகம் வழி 17 கிமீ.(உளுந்தூர் பேட்டைக்கு) மேற்கே 12 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில்.

101) ஒகையூர் : வேப்பூருக்கு வடமேற்கே 20 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில்.

102) நாகலூர் : வேப்பூருக்கு வடமேற்கே கள்ளக்குறிச்சி வழி 17 கிமீ. (ஒகையூருக்கு வடகிழக்கே 5 கிமீ.) ஸ்ரீ சுப்ரமண்யர் கோயில். ஆ — 500. 606203.

103) தியாகதுர்கம் : நாகலூருக்கு வடக்கே 9 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில் ஆ — 130. 606206.

104) விளம்பார் : தியாகதுர்கத்துக்கு மேற்கே 14 கிமீல் உள்ள கள்ளக்குறிச்சிக்குத் தென்கிழக்கு 5 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். 606223.

105) இந்தலி : கள்ளக்குறிச்சிக்குத் தென்மேற்கே சின்ன சேலம் வழி 6 கிமீ. ஸ்ரீ முருகன் கோயில்.

105) தொட்டியம் ; இந்தலிக்கு மேற்கு 4 கிமீ. ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி கோயில். 606214.

107) வெட்டிப் பெருமாளகரம் : தொட்டியத்துக்குத்தென் மேற்கே 3 கி மீ. (இதன் தெற்கே சின்ன சேலம் 3 கிமீ.) ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில். 606201.

108) திம்மபுரம் : சின்ன சேலத்துக்கு வடமேற்கு 5 கிமீ. ஸ்ரீ சுப்ரமன்ய சுவாமி கோயில்.

109) கல்லாநத்தம் : திம்மபுரத்துக்கு வடமேற்கு 2 கிமீ. ஸ்ரீ பாலமுருகன் கோயில்.

